பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

29 01 2025 6 45
செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. இளைஞர்கள் ஆரோக்கியமான மற்றும் சுறுசுறுப்பான வாழ்க்கை முறையை பின்பற்ற வேண்டுமென பிரதமர் திரு நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.
2. இந்திய விண்வெளி ஆய்வுக்கழகம் இஸ்ரோ தனது 100-வது ராக்கெட்டை இன்று காலை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.
3. தமிழகத்தில் புதிதாக 100 அமுதம் நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட இருப்பதாக மாநில உணவு அமைச்சர் திரு சக்கரப்பாணி தெரிவித்துள்ளார்.
4. காவிரி ஒழுங்காற்றுக் குழுவின் 111-வது கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.
5. இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி 26 ரன் விததியாசத்தில் வெற்றிபெற்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ----*</u>

**[]<<<>>>[]**

இளைஞர்கள் ஆரோக்கியமான மற்றும் சுறுசுறுப்பான வாழ்க்கை முறையை பின்பற்ற வேண்டுமென பிரதமர் திரு நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

உத்தராகண்ட் மாநிலம் டேராடூனில் 38-வது தேசிய விளையாட்டுப் போட்டிகளைத் தொடங்கி வைத்து பேசிய அவர், சர்வதேச போட்டிகளில் இந்தியா அதிக பதக்கங்கள் வெல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள மத்திய அரசு உறுதிபூண்டுள்ளது என்றார்.

கடந்த பத்து ஆண்டுகளில் விளையாட்டுத் துறைக்கான பட்ஜெட் ஒதுக்கீடு மும்மடங்காக அதிகரிக்கப்பட்டிருப்பதுடன், கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் அதிநவீன விளையாட்டு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் விளையாட்டு ஒருங்கிணைந்த அம்சமாக கருதப்படுவதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

தேசிய விளையாட்டுப் போட்டிகள் பசுமை விளையாட்டுக்களாகவும், இந்தியாவின் பாரம்பரிய விளையாட்டுக்களை ஊக்குவிப்பதாக அமைய வேண்டுமெனவும் திரு நரேந்திரமோடி கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

இந்திய விண்வெளி ஆய்வுக்கழகம் இஸ்ரோ தனது 100-வது ராக்கெட்டை இன்று காலை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தி சாதனை படைத்துள்ளது.

**nvs -02** செயற்கைக்கோள் ஜி எஸ் எல் வி –எப்-15 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதிஷ் தவன் விண்வெளி மையத்திலிருந்து இன்று காலை விண்ணில் செலுத்தப்பட்டது.

இரண்டாயிரத்து 250 கிலோ எடை கொண்ட இந்த செயற்கைக்கோள் பயண வழிகாட்டி நடைமுறைகளில் வெளிநாடுகளை சார்ந்திருப்பதை தவிர்த்து சுயசார்புக்கு வழிவகுக்கும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக பாதுகாப்புத்துறையின் செயல்பாடுகளுக்கு இந்த செயற்கைக்கோள் உதவிகரமாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த செயற்கைக்கோள் இந்திய நிலப்பரப்புக்கு அப்பால் சுமார் ஆயிரத்து 500 கிலோமீட்டர் தொலைவில் உள்ள பயனாளர்களுக்கும் தனது சேவையை வழங்கும்.

**[]<<<>>>[]**

தேசிய சுகாதார இயக்கத்திற்கான நிதி ஒதுக்கீடு கடந்த பத்து ஆண்டுகளில் 185 சதவீதம் அதிகரிக்கப்பட்டிருப்பதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

இந்த இயக்கத்தின் சாதனைகள் குறித்து நேற்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பத்து ஆண்டுகளுக்கு முன்பு இத்திட்டத்திற்கு 18 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்ட நிலையில் தற்போது 33 ஆயிரத்து 433 கோடி ரூபாய் அளவுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகக் கூறினார்.

இந்த திட்டத்தை செயல்படுத்தியதன் விளைவாக பிரசவத்தின்போது குழந்தைகள் இறப்பு விகிதம் வெகுவாக குறைந்துள்ளதாகவம் அவர் தெரிவித்தார்.

பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால் மக்களுக்கு தரமான சிகிச்சை வசதிகள் குறைந்த செலவில் எளிதில் கிடைப்பதாகவும் திரு ஜெ பி நட்டா குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்ற முப்படையினர் பாசறை திரும்பும் நிகழ்ச்சி இன்று மாலை நடைபெறுகிறது.

இதையொட்டி இந்த ஆண்டு 30 நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் மத்திய ஆயுதக் காவல் படையினரின் பேண்ட் வாத்தியக் குழுவினரின் சிறப்பு நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழச்சியில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர், பிரதமர் திரு நரேந்திரமோடி பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் உள்ளிட்டோர் பங்கேற்கவுள்ளனர்.

**[]<<<>>>[]**

பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் வைர விழா பெருந்திரள் அணியை துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் திருச்சி மாவட்டம் மணப்பாறையில் நேற்று தொடங்கி வைத்தார்.

வைரவிழா அஞ்சல் தலை மற்றும் அஞ்சல் உறையையும் அவர் வெளியிட்டார்.

நிகழ்ச்சியில் பேசிய திரு உதயநிதி ஸ்டாலின், இந்த முகாமில் பங்கேற்றுள்ள வெளி மாநிலத்தவர் மற்றும் வெளி நாட்டினர் தமிழ் நாட்டின் பெருமைகளையும், கலாச்சாரங்களையும் அறிந்து கொள்ள இந்த நிகழ்ச்சி ஊக்குவிப்பதாக இருக்கும் என்றார்.

அதேபோன்று அவர்களுடைய கலாச்சாரம் மற்றும் பழக்கவழக்கங்களை தமிழ்நாட்டு மாணவர்கள் அறிந்து கொள்ளவும் ஒரு வாய்ப்பாக இது அமைந்துள்ளது என்று திரு உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

முன்னதாக இந்த விழாவுக்கான ஏற்பாடுகளை ஆய்வு செய்த மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியன் சாரணியர் முகாமில் பங்கேற்றுள்ள மாணவர்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்க 750 பேர் கொண்ட மருத்துவக் குழுவினர் தயார் நிலையில் உள்ளதாகத் தெரிவித்தார்.

அவசர தேவைகளுக்காக திருச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 25 படுக்கை வசதிகளுடன் கூடிய மருத்துவக் குழுவும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக திரு மா சுப்ரமணியன் கூறினார்.

**[]<<<>>>[]**

காவிரி ஒழுங்காற்றுக் குழுவின் 111-வது கூட்டம் அதன் தலைவர் திரு வினித் குப்தா தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து காவிரி மேலாண்மை ஆணையத்தின் 37-வது கூட்டமும் அதன் தலைவர் திரு எஸ் கே ஹல்தார் தலைமையில் நாளை நடைபெறவுள்ளது.

இந்த கூட்டங்களில் தமிழகம், புதுச்சேரி, கர்நாடகா மற்றும் கேரள மாநிலங்களின் நீர்வளத்துறை செயலாளர்கள் மற்றும் காவிரி தொழில்நுட்பக் குழுவினர் பங்கேற்கவுள்ளனர்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் புதிதாக 100 அமுதம் நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட இருப்பதாக மாநில உணவு அமைச்சர் திரு சக்கரப்பாணி தெரிவித்துள்ளார்.

பொதுவிநியோக திட்ட செயல்பாடுகள் குறித்து கரூரில் மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் அவர் நேற்று ஆய்வு நடத்தினார்.

அப்போது பேசிய அமைச்சர், திமுக ஆட்சி பொறுப்பேற்ற பின் மாநிலம் முழுவதும் இரண்டாயிரத்து 500 முழு நேர மற்றும் பகுதிநேர நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

கரூர் மாவட்டத்தில் மட்டும் புதிதாக 53 கடைகள் திறக்கப்பட்டிருப்பதுடன், கோவை மாவட்டத்தில் ஒரே நாளி 100 புதிய கடைகள் திறக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

மாநிலத்தில் புதிதாக 17 லட்சத்து 50 ஆயிரம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நெல் கொள்முதல் விலை செப்டம்பர் மாதம் முதல் குவிண்டாலுக்கு இரண்டாயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட இருப்பதாகவும் திரு சக்கரப்பாணி தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

சென்னையை அடுத்த ஆவடியில் செயல்பட்டு வரும் மத்திய அரசின் படைக்கல உடை உற்பத்தி தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட உடைகள் முதல் முறையாக சுரினாம் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

இதனை அந்த ஆலையின் பொது மேலாளர் திரு பி எஸ் ரெட்டி கொயசைத்து தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், முதற்கட்டமாக ஒரு கோடியே 71 லட்சம் ரூபாய் மதிப்பிலான நான்காயிரத்து 500 ராணுவ சீருடைகள் ஏற்றுமதி செய்யப்படுவதாகத் தெரிவித்தார்.

இது இந்தியா – சுரினாம் இடையேயான இருதரப்பு உறவை வலுப்படுத்துவதுடன், பாதுகாப்பு ராஜதந்திர நிதியத்தின் கீழ் இந்த ஆடைகள் தயாரிக்கப்படுவதாகவும், திரு பி எஸ் ரெட்டி கூறினார்.

**[]<<<>>>[]**

செர்பியான் பிரதமர் திரு Milos Vucevic தமது பதவியை ராஜிநாமா செய்துள்ளார்.

**[]<<<>>>[]**

ஐ நா – பாலஸ்தீன முகமையுடனான அனைத்து உறவுகளும் நாளை முதுல் துண்டிக்கப்படும் என இஸ்ரேல் அறிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

ஹரியானா மாநிலம் குருஷேத்ரா மாவட்டத்திற்கு உட்பட்ட பெஹோவாவில் சர்வதேச சரஸ்வதி மகோத்சவம் இன்று தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

மகாராஷ்டிரா மாநில தேர்தல் ஆணையராக அம்மாநில முன்னாள் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு தினேஷ் **Waghmare** நேற்று பதவியேற்றுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

போதைப்பொருள் கடத்த முயன்ற உகாண்டா நாட்டைச் சேர்ந்த மூன்று பேரை மும்பை விமான நிலையத்தில் வருவாய் புலனாய்வு அதிகாரிகள கைது செய்தனர்.

**[]<<<>>>[]**

திருவாரூரில் தொழில்நெறி வழிகாட்டுதல் முகாம் மற்றும் கண்காட்சி நேற்று மன்னார்குடி அரசினர் கல்லூரியில் நேற்று நடைபெற்றது.

**[]<<<>>>[]**

பேரிடர் காலங்களில் பொதுமக்கள் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த பேரிடர் மீட்புக் குழுவினரின் ஒத்திகை நிகழ்ச்சி நேற்று பெரம்பலூரில் நடைபெற்றது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் உள்ள அனைத்து சார் பதிவாளர் அலுவலகங்களிலும் தை மாதத்தில் கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாக பதிவுத்துறை தலைவர் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

காஞ்சிபுரத்தில் நீர்வளத்துறை சார்பில் தமிழ்நாடு விவசாயிகள் நீர்பாசன அமைப்புகளின் மண்டல அளவிலான கலந்தாய்வுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

[]<<<>>>[]

தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினம் அருள்மிகு முத்தாரம்மன் கோவிலுக்குச் சொந்தமான ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

இன்று தை அமாவாசையையொட்டி மக்கள் நீர் நிலைகளில் புனித நீராடி தங்கள் முன்னோர்களை வழிபடுகின்றனர்.

[]<<<>>>[]

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி 26 ரன் விததியாசத்தில் வெற்றிபெற்றது.

ராஜ்கோட்டில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் ஆடிய இங்கிலாந்து அணி ஒன்பது விக்கெட் இழப்புக்கு 171 ரன் எடுத்தது.

172 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்திய அணி ஒன்பது விக்கெட் இழப்புக்கு 145 ரன் மட்டுமே எடுத்தது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் இந்திய அணி இரண்டு – ஒன்று என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இரு அணிகளுக்கும் இடையேயான நான்காவது போட்டி புனேயில் நாளை மறுநாள் நடைபெறவுள்ளது.

[]<<<>>>[]

ஹாக்கி இந்தியா லீக் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் கொணாசிகா அணி – ஹைதராபாத் அணியை 3-1 என்ற கோல் கணக்கில் வென்றது.

ரூர்கேலாவில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் சூர்மா அணி – பெங்கால் அணியையும், உத்திரபிரதேச அணி – தமிழ்நாடு அணியையும் எதிர்கொள்கின்றன.

[]<<<>>>[]

மாநில அளவிலான மாணவ மாணவிகளுக்கான குத்துச்சண்டைப் போட்டி நேற்று மயிலாடுதுறையில் தொடங்கியது. மூன்று நாட்கள் நடைபெறும் இப்போட்டியில் மாநிலம் முழுவதிலுமிருந்து 500-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றுள்ளனர்.